# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

*************

## ஊடக அறிக்கை

**<u>ரைசினா உரையாடல் 2026</u>**

சர்வதேச சமூகம் எதிர்கொள்ளும் சவால்மிக்க விவகாரங்களை எதிர்கொள்வதற்கான கடப்பாட்டுடன் பூகோள அரசியல் மற்றும் பொருளாதார விவாகரங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதன்மையான மாநாடே ரைசினா உரையாடல் ஆகும்.

2. ரைசினா உரையாடலின் 11 ஆவது பதிப்பு 2026 மார்ச் 05-07 வரை நடத்தப்படுகின்றது.

3. பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இந்த உரையாடலை மார்ச் 05 ஆம் திகதி ஆரம்பித்துவைப்பார். பின்லாந்து குடியரசின் ஜனாதிபதி அதி மேதகு டாக்டர் அலெக்ஸாண்டர் ஸ்துப் இந்த ஆரம்ப நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரையினை ஆற்றவுள்ளார்.

4. 110 க்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள், முன்னாள் அரச தலைவர்கள் மற்றும் அரசாங்கங்களின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இராணுவ தளபதிகள், தொழில்துறை தலைவர்கள், தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைவர்கள், கல்வியாளர்கள், ஊடகவியலாளர்கள், தந்திரோபாய விவகார வல்லுனர்கள், முன்னணி ஆய்வு நிறுவனங்களின் நிபுணர்கள், மற்றும் இளைஞர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் இந்த 11 ஆவது ரைசினா உரையாடலில் கலந்துகொள்கின்றனர். இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கௌரவ விஜித ஹேரத் அவர்களும் இம்மாநாட்டில் கலந்துகொள்கின்றார்.

5. 2026 பதிப்பின் தொனிப்பொருளாக "சம்ஸ்காரம் - வலியுறுத்தல், வசிப்பிடம், முன்னேற்றம்", என்பது காணப்படுகின்றது. இம்மாநாடு நடைபெறும் மூன்று நாட்களில், உலகின் தீர்மானம் வகுப்பாளர்கள் மற்றும் சிந்தனை மிக்க தலைவர்கள் ஆறு தொனிப்பொருட்களின் அடிப்படையில் பல்வேறு வடிவங்களில் கலந்துரையாடல்களில் ஈடுபடுவார்கள்: (i) Contested Frontiers:: அதிகாரம், துருவமயம் மற்றும்

புற எல்லை; (ii) Repairing the Commons: புதிய குழுக்கள், புதிய பாதுகாவலர்கள், புதிய வாய்ப்புகள்; (iii) White Whale: 2030 நிகழ்ச்சி நிரலை உருவாக்கல்; (iv) The Eleventh Hour: காலநிலை, மோதல் மற்றும் தாமத செலவு; (v) Tomorrowland: ஒரு தொழில்நுட்பத்தை நோக்கிய பயணம்; (vi) Trade in the Time of Tariffs: மீட்சி, மீள்தன்மை, மறு கண்டுபிடிப்பு, ஆகியவையே அத்தொனிப்பொருட்களாகும்.

6. இம்மாநாட்டில் 110 நாடுகளைச் சேர்ந்த 2700 பேர் நேரடியாக பங்கேற்கும் நிலையில் உலகளாவிய ரீதியில் பல்வேறு டிஜிட்டல் மார்க்கங்கள் ஊடாக பல மில்லியன் பேர் பார்வையிடவுள்ளனர்.

7. இது குறித்த மேலதிக விபரங்களை https://raisinadialogue.org/raisina-2026 எனற தளத்தில் காணமுடியும்.

* * * * *

**கொழும்பு**
**05 மார்ச் 2026**